

# நந்திக் கலம்பகம்

# நந்திக் கலம்பகம்

பதிப்பாசிரியக் குழுவினரால்
பல பிரதிகளை ஒப்பு நோக்கிப் பரிசோதித்து
வெளியிடப்பெற்றது

*வெளியிடுவோர்*

**எஸ். ராஜம்**

**5, தம்புச் செட்டித் தெரு**
**சென்னை-1**

# நூன்முகம்

சிறு பிரபந்த வகையுள் பல திறப்பட்ட சுவைகளும் பொதிந்துள்ள இலக்கியம் கலம்பகம். அகம், புறம் என்னும் பொருள்கள்மேல், எல்லா வகையான பாவும் பாவினங்களும் விரவிவர, புயவகுப்பு, அம்மானை, ஊசல், முதலிய பதினெட்டு உறுப்புக்களையும் பெற்றுவரும் இயல்பினது இந் நூல். இது அந்தாதியாக அமைக்கப்பெறும். தேவர், அரசர், முதலாயினுரைத் தலைவராகக் கொண்டு பாடுதல் மரபு.

நந்திக் கலம்பகம் தெள்ளாற்றுப் போர் வென்ற நந்திவர்மப் பல்லவனைத் தலைவனுகக் கொண்டுள்ளது. இதனைப் பாடியவரின் பெயர் தெரியக்கூடவில்லை. இதில் 88 பாடல்கள் உள்ளன. 'அரசர்க்குத் தொண்ணூறு' என்னும் இலக்கண அமைதி கொண்டு பார்த்தால், மேலும் இரண்டு பாடல்கள் இறந்துபட்டனவோ என்னும் ஐயுறவு நேர்கிறது.

நந்தியைப் பற்றிய பல தனிப்பாடல்கள் கலம்பகப் பிரதிகளில் ஒருசேர உள்ளன. அத்தகைய தனிப் பாடல்களும் நூல் இறுதியில் தரப்பட்டுள்ளன. தலைப்புக்கள் புதியனவாய்ச் சேர்க்கப்பெற்றவை.

## கடவுள் வணக்கம்

மண்டலம் ஆய், அம்பரம் ஆய், மாருதம் ஆய், வார் புனல் ஆய்,
ஒண் சுடர் ஆய், ஒளி என்னும் ஓர் உருவம் மூன்று உருவம்;
மை வடிவோ, வளை வடிவோ, மரகதத்தின் திகழ் வடிவோ,
செவ் வடிவோ, பொன் வடிவோ,—சிவனே!—நின் திருமேனி?

இலகு ஒளிய மூஇலை வேல் இறைவா! நின் இயல் கயிலைக்
குல கிரியும், அரு மறையும், குளிர் விசும்பும் வறிது ஆக,
அலர் கதிர் வேல் படை நந்தி அவனி நாராயணன் இவ்
உலகு உடையான் திரு முடியும் உள்ளமுமே உவந்தனையே!

செழு மலர் துதைதரு தெரிகணை மதனனது
எழில் உடல் பொடி பட, எரிதரு நுதலினை;
அரு வரை அடி எழ முடுகிய அவுணனது
ஒருபது முடி இற, ஒரு விரல் நிறுவினை.

வீ சிகையின் கொன்றையும் வெள் எருக்கும் விராய்த் தொடுத்த
வாசிகையின் ஊடே வெண் மதிக் கொழுந்தைச் செருகினையே.

பாய் புலியின் உரி அசைத்த பல புள்ளிப் படிவம் எலாம்
ஆயிர வாய்க் கருங் கச்சை அழல் உமிழ அசைத்தனையே.

சோர் மதத்த வார் குருதி சோனை நீர் எனத் துளிப்ப,
ஏர் மதத்த கரி உரிவை ஏகாசம் இட்டனையே.

திசை நடுங்கத் தோன்றிற்று, நீ உண்ட திறல் நஞ்சம்;
உயிர் நடுங்கத் தோன்றிற்று, நீ உதைத்த வெங் கூற்றம்.

அனைத்து உலகில் பிறப்பும் நீ,
அனைத்து உலகில் இறப்பும் நீ;
அனைத்து உலகில் துன்பமும் நீ,
அனைத்து உலகில் இன்பமும் நீ;

வானோர்க்குத் தாதையும் நீ,
வந்தோர்க்குத் தந்தையும் நீ;
ஏனோர்க்குத் தலைவனும் நீ,
எவ் உயிர்க்கும் இறைவனும் நீ.

ஊழி நீ; உலகு நீ;
உருவும் நீ; அருவும் நீ;
ஆழி நீ; அமுதம் நீ;
அறமும் நீ; மறமும் நீ.

—என ஆங்கு,
ஒரு பெருங் கடவுள்! நிற் பரவுதும்—'எம் கோன்,
மல்லை வேந்தன், மயிலை காவலன்,
பல்லவர் தோன்றல், பைந் தார் நந்தி,
வடவரை அளவும் தென் பொதி அளவும்
விடையுடன் மங்கல விசயமும் நடப்ப,
ஒரு பெருந் தனிக் குடை நீழல்,
அரசு வீற்றிருக்க அருளுக!' எனவே. ௧

தலைவி கூற்று

எனதே கலை; வளையும் என்னதே—மன்னர்
சின ஏறு செந் தனிக் கோல் நந்தி இன வேழம்
கோ மறுகில் சீறி, குருக்கோட்டை வென்று ஆடும்
பூ மறுகில் போகாப் பொழுது. ௨

குருகு விடு தூது

'பொழுது கண்டு ஆய் அதிர்கின்றது போக, நம் பொய்யற்கு என்றும்
தொழுது கொண்டேன்' என்று சொல்லு கண்டாய்; தொல்லை நூல்
முழுது கண்டான், நந்தி மல்லை அம் கானல் முதல்வனுக்குப் [வரம்பை
பழுது கண்டாய், இதைப் போய்ப் பகர்வாய், சிறைப் பைங் குருகே! ௩

தோழி கூற்று

குருகு உதிர் முன் பனிக்கு ஒதுங்கிக் கூசும் கங்குல்,
குளிர் திவலை தோய்ந்து எழுந்த நறுந் தண் வாடை
அருகு பனி சிதற வர, அஞ்சுவாளை,
'அஞ்சல், அஞ்சல்!' என்று உரைத்தால் அழிவது உண்டோ?—
திருகு சினக் கட களிற்றுச் செங்கோல் நந்தி
தென்னவர் கோன்தன் குறும்பில் சென்று சூழ்ந்த
சுரிகை வினைப் பகைஞர் உடல் துண்டமாகத்
துயில் உணர்ந்த வல் ஆண்மைத் தொண்டை வேந்தே! ௪

### கடுவாய்ப் பறை

தொண்டை வேந்தன், சோணாடன், தொல் நீர் அலங்கல் முந்நீரும்
கொண்ட வேந்தர் கோன், நந்தி, கொற்ற வாயில் முற்றத்தே,
'விண்ட வேந்தர்தம் நாடும் வீரத் திருவும், எம் கோனைக்
கண்ட வேந்தர்! கொண்மின்கள்' என்னும், கன்னிக் கடுவாயே. 5

### செவிலி கூற்று

கடுவாய் இரட்ட, வளை விம்ம, மன்னர்
    கழல் சூட, அம் கண் மறுகே
அடு வார் மருப்பின் அயிராவதத்தின்,
    அடு போர் செய் நந்தி வருமே;
கொடு வார் புனைத்து நகுவார் படைக்கண்
    மடவாரிடைக் கொள் மனமேல்,
வடு ஆய் இருக்கும்; மகளே! இ(ம்) முன்றில்
    மணி ஊசல் ஆடல் மறவே. 6

### புய வகுப்பு

மற மத கரி திசை நிறுவின; மணி நகையவர் மனம் நகுவன;
விறல் அரசர்கள் மனம் நெகிழ்வன; விரை மலர் களி முலை பொருவன;
திறல் உடையன; தொடை புகழ்வன; திகழ் ஒளியன; புகழ் ததைவன;
நறு மலர் அணி அணி முடியன;—நயபர! நினது இரு புயமதே. 7

### வாடைக்குத் தலைவி இரங்குதல்

புயங்களின் பூவைமார் பொங்கு கொங்கையின்
நயம் கொளத் தகு புகழ் நந்தி கச்சி சூழ்
கயங்களில் கடி மலர் துழாவி, காமுகர்
பயம் கொள, புகுந்தது—பருவ வாடையே! 8

வாடை நோக வீசுமால்; அ(ம்) மாரன் வாளி தூவுமால்;
ஆடல் ஓதம் ஆர்க்குமால்; என் ஆவி காக்க வல்லனே!
ஏடு உலாவு மாலை சேர் இராசன், மல்லை நந்தி, தோள்
கூடினால், அலர் வராது;—கொங்கு விம்மு கோதையே! 9

### தலைவன் நெஞ்சொடு கிளத்தல்

கோதை சோரின், சோர்; கொங்கை விம்மில், விம்மு; குறு முறுவல்
சோதி வெளுக்கில், வெளு; மருங்குல் துவளின், நீயும் துவள் கண்டாய்;
காது நெடு வேல் படை நந்தி, கண்டன், கச்சி வள நாட்டு
மாதர் இவரோடு உறுகின்றாய்;—வாழி, மற்று என் மடநெஞ்சே! 10

### தோழி கூற்று

நெஞ்சு ஆகுலமுற்று இஙனே மெலிய,
நிலவின் கதிர் நீள் எரியாய் விரிய,
துஞ்சா நயனத்தொடு சோரும் இவட்கு
அருளாது ஒழிகின்றது தொண்டைகொலோ—
செஞ் சாலி வயல் படர் காவிரி சூழ்
திரு நாடுடை நந்தி சினக்கலியின்
வெஞ் சாயல் மறைத்த தனிக் குடையான்,
விடை மண் பொறி ஓலை விடேல் விடுகே! 11

### படைவீரன் நந்தியின் வீரத்தைக் கூறுதல்

விடுதிர்கொல்லோ, வள நாடு? உடைவீர்! அரசற்கு முன் நின்று
இடுதிர்கொல்லோ, பண்டு இறுக்கும் திறை? எரி கானத்து உம்மை
அடுதிர்கொல்லோ? அன்றி, நந்தி எம் கோன் அயிராவதத்தில்
படுதிர்கொல்லோ? படை மன்னீர்! என் ஆம், உங்கள் பாவனையே? 12

### தோழி கார் வரவு உரைத்தல்

வனை வார் குழல் வேணியும், வாடை, கணீர்
நனை வார் துகிலும், இவை நாளும் இரா;—
வினை வார் கழல் நந்தி விடேல்விடுகின்
கனை வார் முரசு ஒத்தது கார் அதிர்வே! 13

### யானை மறம்

அதிர் குரல மணி நெடுந் தேர் அவனி நாரணன் களிற்றின்
கதிர் ஒளிய வெண் மருப்புக் கன வயிரம் செறிந்ததால்;
மதுரைகொலோ? அடு புலிக்கோன் நகரிகொலோ? மாளிகை சாய்ந்து
எதிர் எதிரே கெடநின்றது எவ் ஊர் கொல்? அறியோமால்! 14

### நந்தியின் பெருமை

ஓம மறைவாணர், ஒண் பொற் கழல் வேந்தர்,
தாம முடிக்கு அணிந்த தாளிப் புல் கோ மறுகில்
பாவு அடிக்கீழ்ப் பல் யானைப் பல்லவர் கோன் நந்திதன்
சேவடிக்கீழ்க் காணலாம் சென்று. 15

சென்று இஞ்சிமேல் செங் கண் வேழம் சிவப்ப, சிலர் திகைப்ப,
அன்றும் சினத்தால் மறவர் மறுத்தரார் போலும் அஃதே;
குன்றம் செய் தோள் நந்தி நாட்டம் குறி குருக்கோட்டையின்மேல்
சென்று அஞ்சப்பட்டது எல்லாம் படும், மாற்றலர் திண் பதியே. 16

பதிதொறும் புயல் பொழிதரு மணி பணைதரு பரு மணி பகரா, நெல்
கதிர் தொகு வரு புனல் கரை பொருது இழிதரு காவிரி வளநாடா!
நிதி தரு கவிகையும் நிலமகள் உரிமையும் இவை இவை உடை நந்தீ!
மதி இலி அரசர் நின் மலர் அடி பணிகிலர்; வானகம் ஆள்வாரே. 17

மடல்

ஆள் குலாம் கடற் படை அவனி நாரணன்
தோள் குலாம் மது மலர்த் தொண்டை வாய்ச்சியர்
வாள் குலாம் கண்ணினுல் விளைத்த மம்மர் நோய்
மீட்கலாம்—மடல் கையில் விரவும்ஆகிலே. 18

மாலை பெறுது வருந்துதல்

விரவாத மன்னர் எலாம் விண் ஏற, வெள்ளாற்று
வெகுண்டோன் தொண்டைக்கு
இரவாத பரிசு எல்லாம் இரந்து ஏற்றும்; பாவைமீர்!
எல் ஈர் வாடை
வர, வாதை உற்று இருந்து வருந்துவார் பலர் எனினும்,
வாழி வாழி!
பர வாதை நந்தி செங்கோல் இது ஆகில், பார் ஆளும்
பரிசு நன்றே! 19

தலைவன் கூற்று

நன்றும் நெடிதாய் அமர்கின்றது இரா;
நலிகின்றது மாருதசாலம்; எனக்கு
என்றின் நிலவு என்னும் இளம் பிறையும்
எரியே சொரிகின்றது; யாது செய்கோ?
அன்று இந் நிலம் ஏழும் அளந்த பிரான்,
அடல் உக்ரமகோபன் அடங்கலர்போல்,
இன்று என் உயிர் அன்னவள் கொங்கையை விட்டு
எங்ஙன் துயில்கின்றனன், ஏழையனே? 20

குடை மங்கலம்

ஏழைமார் துணை,
வாழி நந்தி, தண்
நீழல் வெண்குடை
ஊழி நிற்கவே! 21

செவிலி கூற்று

நிற்க மன்னவர் நிரந்த வெண் குடை
மிடைந்த நீள் கடை நெடுந்தகை,
வில் கொள் நல் நுதல் மடந்தைமார் மிக
முயங்கு தோள் அவனி நாரணன்,
கல் கொள் வார் மதில் கச்சி நந்தி,
நலம் கொள் அன்னவன், அலங்கல்மேல்
ஒற்கம், என் மகள்; உரைசெய்தோ, உலகு
அளிப்பன்? இத் திறன் உரைத்திடே. 22

பாணன் பெற்ற பேறு

உரை வரம்பு இகந்த உயர் புகழ்ப் பல்லவன்,
அரசர் கோமான், அடு போர் நந்தி
மா வெள்ளாற்று மேவலர்க் கடந்த
செரு வேல் உயர்வு பாடினன்கொல்லோ?—
நெருநல், துணி அரைச் சுற்றி,
பரடு திறப்பத் தன்னுல் பல் கடைத்
திரிந்த பாணன் நறுந் தார் பெற்று,
காஅர் தளிர்த்த கானக் கொன்றையின்
புதுப் பூப் பொலன் கலன் அணிந்து,
விளங்கு ஒளி ஆனனன் இப்போது;
இளங் களி யானை எருத்தமிசை மன்னே! 23

தலைவன் கூற்று

மன்னன் மட மயிலை ஆளி மத யானை நந்தி, வறியோர்
சொன்ன பொருள் நல்கு வள்ளல், தொகு நீர தொண்டை வள நாட்டு
அன்ன நடையாளை, அல்குல் பெரியாளை, அங்கை அகல் வான்
மின்னை மெலிவாளை, நூலின் இடையாளை, நேர்வ மயிலே! 24

தலைவன் நெஞ்சொடு கிளத்தல்

மயில் கண்டால் மயிலுக்கே வருந்தி, ஆங்கே
மான் கண்டால் மானுக்கே வாடி, மாதர்
குயில் கண்டால் குயிலுக்கே குழைதிஆகின்,
கொடுஞ் சுரம் போக்கு ஒழி—நெஞ்சே!—கூடா மன்னர்
எயில் கொண்டான், மல்லைஅம் கோன், நந்தி வேந்தன்,
இகல் கொண்டார் இருங் கடம்பூர் விசும்புக்கு ஏற்றி
அயில் கொண்டான், காவிரி நாட்டு அன்னப் பேடை
அதிசயிக்கும் நடையாரை அகலல் நூற்றே. 25

நந்தியின் வீரம்

நூற் கடற் புலவன், நுரை வெண் திரை
நாற் கடற்கு ஒரு நாயகன், நந்திதன்
கோல் கடைப் புருவம் துடிக்கும் துணை—
வேல் கடற் படை வேந்தர் தம் வீரமே! 26

நந்தியின் வென்றிச் சிறப்பும் கொடைச் சிறப்பும்

வீர தீரன், நல் விறல் அவிர் கஞ்சுகன், வெறியலூர்ச் செரு வென்றோன்;
ஆர்வமா உளம் நின்றவர் அன்பன், மற்று அவன் பெருங் கடை நின்ற
சேர சோழரும், தென்னரும், வட புலத்து அரசரும், திறை தந்த
ஈர மா மத கரி இவை; பரி இவை; இரவலர் கவர்வாரே! 27

செவிலி கூற்று

கவரிச் செந்நெல் காடு அணி சோலைக் காவிரி வள நாடன்,
குமரிக் கொண்கன், கங்கை மணாளன், குரை கழல் விறல் நந்தி,
அமரில் தெள்ளாற்று அஞ்சிய நெஞ்சத்து அரசர்கள் திரள் போகும்
இவரிக் கானத்து ஏகிய ஆறு என், எழில்நகை இவளோடே? 28

ஊசல்

ஓடு அரிக் கண் மட நல்லீர்! ஆடாமோ ஊசல்?
உத்தரிகப் பட்டு ஆட, ஆடாமோ ஊசல்?
ஆடகப் பூண் மின் ஆட, ஆடாமோ ஊசல்?
அம் மென் மலர்க் குழல் சரிய, ஆடாமோ ஊசல் ?
கூடலர்க்குத் தெள்ளாற்றில் விண் அருளிச் செய்த
கோ முற்றப் படை நந்தி, குவலய மார்த்தாண்டன்,
காடவர்க்கு முன் தோன்றல், கை வேலைப் பாடி,
காஞ்சிபுரமும் பாடி, ஆடாமோ ஊசல்? 29

செவிலி கூற்று

ஊசல் மறந்தாலும், ஒண் கழல் அம்மானை
வீசல் மறந்தாலும், மெல்லியல் என் பேதை,—
பூசல் இலங்கு இலை வேல் பொற் கழல் நந்தி!—நின
பாசிலை அம் தொண்டை அல்லது பாடாளே! 30

நந்தியின் கொடைச் சிறப்பு

பாடிய நாவலரோ, வேந்தரோ, பல் புரவிப்
பீடு இயல் மா களிற்றார், பிச்சத்தார்? கூடார்
படை ஆறு சாயப் பழையாறு வென்றான்
கடை ஆறு போந்தார், கலந்து. 31

### தலைவன் கூற்று

கலம் கொள் அலங்கல் வேல் நந்தி கச்சி நாட்டோன், அவன் கழல்
புலம் கொள் ஒளிய நல்லோர்க்கும் புகல்கின்றோர்க்கும் பொன்; ஆர
நலம் கொள் முறுவல் முகம் சாய்த்து, நாணு நின்று, மெல்லவே
விலங்கல் வைத்த மின் நோக்கின் மேலும் உண்டோ, வினையேற்கே? 32

### தோழி கூற்று

வினையின், சிலம்பன் பரிவும், இவள்தன் மெலிவும், மென் பூந்
தினையும், விளைந்தது; வாழி!—தன் மீறு தெள்ளாற்று நள்ளார்
முனையும் அன்று ஏக முனிந்த பிரான் முனையின் பெருந் தேன்
வனையும் வடவேங்கடத்து ஆர் தண் சாரலின் வார் புனமே. 33

### தோழி கூற்று

புனத்து நின்ற வேங்கைமேல் புகைந்து எழுந்த ஆனையின்
சினத்தை அன்று ஒழித்த கைச் சிலைக்கை வீரர் தீரமோ?
மனத்துள் நின்ற வெஞ் சினம் மலைத்தல் கண்டு, அதிர்ந்த மான்
வனத்து அகன்று அதிர்ந்ததோ?—நந்தி மல்லை ஆர்ப்பதே! 34

### தலைவி கூற்று

ஆர்க்கின்ற கடல் ஓதம் ஆர்க்குமாறும்,
அசைகின்ற இளந் தென்றல் அசையுமாறும்,
கூர்க்கின்ற இள மதியம் கூர்க்குமாறும்,
காணலாம்—குருக்கோட்டைக் குறுகா மன்னர்
போர்க்கின்ற புகர் முகத்துக் குளித்த வாளி
பூதலத்தின் வடிம்பு அலம்பப் பூண்ட வில்லோன்,
பார்க்கு ஒன்று செந் தனிக் கோல் பைந் தார் நந்தி,
பல்லவர் கோன், தண் அருள் யாம் படைத்த ஞான்றே. 35

### தோழி கூற்று

ஞான்ற வெள் அருவி! இருவி! எங்கள் பொன்
தோன்றல் வந்திடின், சொல்லுமின்—ஒண் சுடர்
போன்ற மன்னவன் நந்திதன் பூதரத்து
ஈன்ற வேங்கை இருங் கணிச் சூழ்ச்சியே! 36

### பூவை நிலை

சூழி வன் மத யானையின் பிடர் படு சுவடு இவை; சுவட்டின் கீழ்
வாழி இந் நில மன்னர் வந்து அனுதினம் இறைஞ்சிய வடுக் கண்டோம்;
ஆழி மன்னவ! அன்னையர் ஆய்ச்சியர் அடும் கயிற்று அடியிட்ட
பாழி மன் நெடுந் தோள் வடுக் கண்டிலம்; பல்லவ! பகர்வாயே! 37

பகரம் கொள் நெடுந் திவலை பனி விசும்பில்
பறித்து எறிய, பண்டு முந்நீர்
மகரம் கொள் நெடுங் கூல வரை திரித்த
மால் என்பர்,—மன்னர் யானை
சிகரங்கள்போல் மடியத் தெள்ளாற்றுக்
கண் சிவந்தான், தென்னன் தொண்டி
நகரம் கைப்படுத்த பிரான், நந்தி, நரபதி
பணி கொள் நங்கள் கோவே. 38

### நந்தியின் உலாக் கண்ட மகளிர் கூற்று

நங்கள் கோத் தொண்டை வேந்தன், நாம வேல் மன்னர்க்கு எல்லாம்
தங்கள் கோன், அங்க நாடன், சந்திர குல ப்ரகாசன்,
திங்கள்போல் குடையின் நீழல் செய்ய கோல் செலுத்தும் என்பர்;
எங்கள் கோல் வளைகள் நில்லா விபரிதம் இருந்தவாறே! 39

### தோழி கூற்று

ஆறு விறல் அடு போர் வன்மையால் அமர் ஆடி, அப்பால்
பாறு ஆர் களிற்று உயர் பல்லவர் கோன் நந்தி மல்லை அன்றிக்
கூறுள் இவள், இளங்கொங்கை; அவன் வளந்தொண்டை அல்லால்,
நாறுது, இவள் திரு மேனியும்; நாம் என்கொல், நாணுவதே? 40

நாணுது, இத் திரு மடவார் முன்பு, நின்
நன் பொன் கழல் இணை தொழுதாரில்,
பூண் ஆகத்து ஒளிர் பொலன் ஆகச் செய்த
புது மென் தொண்டையது அருளாயே!
வாணனைச் சுளி களி யானைப் படை
வய வேல் அடையலர் குல காலா!—
கோணமைக்கு ஒரு குறை உண்டோ? உரை—
கொங்கா! நின்னது செங்கோலே. 41

செங்கோல் வளைக் கை இவளும் துவண்டு,
செறி மாமை வாட, எழில் ஆர்
அம் கோல் வளைக் கை இளையார் இழப்ப,
அரசாள்வது என்ன வகையோ?
தம் கோல் வளைத்த திகழ் சேரர் சோழர்
தமிழ் மன்னர் நின்ற நிலமேல்
வெங் கோல் நிமிர்த்த வளையும் சிலைக் கை
விறல் நந்திமேல் மொழிவையே! 42

மொழி ஆர் தொண்டைப் பல் மலர் முற்றும் தெருமந்து,
விழியாள் என்றும் மேனி வெளுத்து உற மெலிவாளை
ஒழியா வண் கைத் தண் அருள் நந்திதன் ஊர் மட்டோ,
வழியா நகும்?—மா கடல் வட்டத்து ஒரு வண் கோவே! 43

ஒரு கோமகன், நந்தி, உறந்தையர் கோன்,
உயர் நீள் வலயத்து உயர் வாளை வளை
குருகு ஓடு வயல் படர் காவிரியில்
குலவும் புயல் கண்டு, புகார் மணலில்
பெருக ஓடு நெடுங் கழி சூழ் மயிலைப்
பெருமானது பேர் அணி நீள் முடிமேல்
தரு கோதை நினைந்து அயர்வாள் மெலியத்
தழல் வீசுவதோ?—குளிர் மா மதியே! 44

மதியம் எரி சொரியும் மாலை; அம் மாலை
மறந்தும் புலராது கங்குல் எலாம்; கங்குல்
கதிர் செய் அணி வண்டு காந்தாரம் பாட,
களி வண்டு புகுந்து உலவும் காலமாம் காலம்;
பதியின் வளர்ந்தருளும் தொண்டையர் கோன் நந்தி,
பல்லவற்கு நேரலர்தம் பாவையர்தம் பாவை
விதியின் விளைவு கண்டு யாம் இருப்பது அல்லால்,
வினையம் மற்றும் உண்டோ, நம் மெல்லோதி மாட்டே? 45

தலைவி கூற்று

மாட்டாதே இத்தனை நாள்!—மால் நந்தி வான் வரைத் தோள்
பாட்டாதே, மல்லையர்கோன் பல் யானைப் பருச் சுவடு
காட்டாதே, கைதைப் பொழில் உலவும் காவிரி நீர்
ஆட்டாதே, வைத்து என்னை ஆயிரமும் செய்தீரே! 46

### பாங்கன் கூற்று

செய்ய வாய், மிகக் கரிய கண், வன முலை,
செறிந்து இறும் மருங்குல் கொம்பு,
ஐய சாலவும் அவிர் இழை அல்குல், அம்
மது மலர்க் குழல் என்றுல்,
வெய்ய வெப்பு அவியாத குஞ்சர நந்தி,
வீர வேள், அவனைப் போய்,
நைய, நாம் இவன் நகரிகை தொழுதிலம்!
நம் உயிர் அளவு அன்றே! 47

### தலைவன் கூற்று

அளவு கண்டால் குடங்கைத் துணை போலும்—அரசர் புகும்
வளவு கண்டான், நந்தி, மாளுேதயன் வையம்தன்னில் மகிழ்
தளவு கண்டாலன்ன வெண் நகையால், தமியேனது உள்ளம்
களவு கண்டார் முகத்துக் கண்களாய கயல் குலமே! 48

### நந்தியின் புகழ்

குலமரபும், ஒவ்வாது பயின்று வந்த
குடித் தொழிலும், கொள் படையின் குறையும், கொற்றச்
சில அளவும் சிந்தியாத் தெவ்வர் தேய,
தெள்ளாற்றில் செரு வென்ற செங்கோல் நந்தி,
புல அரசைப் புறங்கண்ட புகழ் சேர் கோவே!
பூ வலயம்தனில்-கரி ஆய் நின்ற மன்னு!—
சொல அரிய திரு நாமம் உனக்கே அல்லால்,
சொல ஒருவர்க்கு இசையுமோ!—தொண்டைக்கோவே! 49

கோவேம் மாலை மாலையர்க்கோ கோவே வேண்டும் நிலவோ கண்
கோவே மாலை மாலையது கொண்டார் குறுகுமாறு அறியேன்
கோவே மாலை நீள் முடி ஆர் கொற்ற நந்தி கச்சி உளார்
கோவே மாலை உள்ளும் எங்கள் கோவே கம்பர் ஆனுரே. 50

### தோழி கூற்று

ஆகிடுக, மாமை; அணி கெடுக, மேனி; அலர் இடுக, ஆரும் அயலோர்;
போகிடுக, சங்கு; புறம்நகுக, சேரி; பொரு புணரி சங்கு வளை மென்
நாகு இடறு கானல் வள மயிலை ஆளி நயபரனும், எங்கள் அளவே
ஏ கொடியன் ஆக, இவை இயையும்; வஞ்சி இனி உலகில் வாழ்வது
[உளதோ? 51

### தலைவன் கூற்று

உளமே! கொடி மருங்கு உண்டு; இல்லை என்னில்-
இள முலைகள் எவ்வாறு இருக்கும்?—கிளர் ஒளிய
தென் இலை வேல் கண்ணினாள் தெள்ளாற்றில் வென்ற கோன்-
தன் மயிலை அன்னாள்தனக்கு. 52

### தலைவி கூற்று

தனக்கு உரிய என் கொங்கை தான் பயந்த
மழ களிற்றுக்கு ஆக்கி, தன் பால்
எனக்கு உரிய வரை மார்பம் எங்கையர்க்கே
ஆக்கினான்; இகல் வேல் மன்னர்
சினக் கரியும் பாய் மாவும் தெள்ளாற்றில்
சிந்துவித்த செங்கோல் நந்தி,
மனக்கு இனியான், அவன் இட்ட வழக்கு அன்றோ
வழக்கு, இந்த வையத்தார்க்கே? 53

### தோழி கூற்று

தார் வட்டக் கிளி மருவும் சொல் பகர்
தளர் இடை தையல் வஞ்சிக்கு, இன்று,
ஏர் வட்டத் தனி மதி வெள்ளிக் குடை
கொடிது என்றால், அது பழுது அன்றோ?—
போர் வட்டச் சிலை உடை வாள் பற்றிய
பொரு கடல் மல்லைப் புரவலனே!
பார் வட்டத் தனி மத யானைப் படை
உடையாய்! பல்லவர் அடல் ஏறே! 54

அடல் ஏறு வலத்து உயர் வைத்த பிரான்,
அடல் உக்ரமகோபன், அடங்கலர் தாம்
மடல் ஏறிட வாகை புனைந்த பிரான்,
வட வேங்கட நாடுடை மன்னர் பிரான்,
பெடை ஏறு நெடுங் கழி சூழ் மயிலைப்
பெருமானது பேர் அணி நீள் முடிமேல்
மிடல் ஏறிய கோதை நினைந்து அயர்வாள்
மெலிய, தழல் வீசும், இம் மா மதியே! 55

காலம்: தலைவி கூற்று

மலர்க் குல மாதவிதன்மேல் வண்டு ஆர்க்கும் காலம்;
வரிக் குயில்கள் மாவில் இளந் தளிர் கோதும் காலம்;
சிலர்க்கு எல்லாம் செழுந் தென்றல் அமுது அளிக்கும் காலம்;
தீவினையேற்கு அத் தென்றல் தீ வீசும் காலம்;
பலர்க்கு எல்லாம் கோன் நந்தி பல் மாடக் கச்சிப்
பனிக் கண்ணூர் பரு முத்தம் பார்த்து ஆடும் காலம்;
அலர்க்கு எல்லாம் ஐங் கணை வேள் அலர் தூற்றும் காலம்;
அகன்று போனவர் நம்மை அயர்த்து விட்ட காலம்! 56

தோழி கூற்று

கால வினைவாணர் பயில் காவிரி நல் நாடா!
ஞாலம் ஒரு கோலினில் நடாவு புகழ் நந்தி!
நீல மயில் கோதை இவள் நின் அருள் பெறுளேல்,
கோல வளை கோடல் இது மன்னர் புகழ் அன்றே. 57

தலைவன் கையுறை புகழ்தல்

புரவலன், நந்தி, எங்கள் பொன்னி நல் நாட்டு மன்னன்,
வர மயில் போற்று சாயல் வாணுதல் சேடி! காணும்
குரவு அலர் பொழிலில் கோலக் கோட்டிடை இல்லைஆகில்,
இரவு அலர் மலர்கள் எங்கும் இல்லையோ? நல்குவேனே. 58

தலைவி மாலை பெறாது இரங்குதல்

நல்கும் நந்தி, இந் நானிலம் காவலன், மாரவேள், நளிர் முத்தம்
மல்கு வெண்குடைப் பல்லவர் கோளரி, மல்லல் அம் திண் தோள்மேல்
மெல்கு தொண்டையும் தந்தருள்கிலன்; விடை மணியொடும் விடியாத
அல்லினோடும், வெண் திங்களினோடும் உளன்; உய்வகை அறியேனே! 59

தலைவன் கூற்று

அறம் பெருகும் தனிச் செங்கோல் மாயன் தொண்டை
அம் கனி போல் சிவந்து, திரு முகத்துப் பூத்து
மறிந்து உளதே பவள வாய்; மருங்கில் ஆடும்
வல்லி இடை; மணி முறுவல் முத்து; சால
நெறிந்துளதே கருங் குழல்; அம் குவளை கண்கள்;
நெடிய வேய் தொடிய தோள்; நேர்ந்து, வெம்மை
செறிந்துளவே முலை; சிலையே புருவம்;—ஆகி-
யவர் நம்மைச் சிந்தை நோய் திருத்தினரே. 60

### நந்தியின் வென்றிச் சிறப்பு

திருவின் செம்மையும், நிலமகள் உரிமையும்,
பொது இன்றி ஆண்ட பொலம் பூண் பல்லவ!
தோள் துணை ஆக, மா வெள்ளாற்று
மேவலர்க் கடந்த அண்ணல்! நந்தி! நின்
திரு வரு நெடுங் கண் சிவக்கும்ஆகின்,
செருநர் சேரும் பதி சிவக்கும்மே;
நிறம் கிளர் புருவம் துடிக்கின், நின் கழல்
இறைஞ்சா மன்னர்க்கு இடம் துடிக்கும்மே;
மை இல் வாள் உறை கழிக்கும் ஆகின்,
அடங்கார் பெண்டிர்
பூண் முலை முத்தப் பூண் கழிக்கும்மே;
கடுவாய்போல் வளை அதிர, நின்னொடு
மருவா மன்னர் மனம் துடிக்கும்மே;
மா மத யானை பண்ணின்,
உதிரம் மன்னும், நின் எதிர் மலைந்தோர்க்கே. 61

### செவிலி கூற்று

ஓராதே என் மகளைச் சொன்னீரே! தொண்டைமேல்
பேராசை வைக்கும் பிராயமோ?—நேரா தார்
ஆள் வலியால் கொண்ட அகல் ஞாலம் அத்தனையும்
தோள் வலியால் கொண்ட துயக்கு! 62

### தோழி கூற்று

'துயக்குவித்தான்; துயில் வாங்குவித்தான்; துயில்வித்து, இவளை
வயக்குவித்தான், உள்ளம் வஞ்சனையால்; மலர்க் காவகத்து
முயக்குவித்தான்; துகில் வாங்குவித்தான்; முனம் நின்று, இவளை
மயக்குவித்தான்;—நந்தி மானோதயன்' என்று வட்டிப்பனே. 63

### சம்பிரதம்

வட்டு அன்றே? நீர் இதனை மிகவும் காண்மின்!
மற்றைக் கை கொட்டினேன்; மாவின் வித்து ஒன்று
இட்டு, அன்றே பழம் பழுப்பித்து, உண்ணக் காண்மின்!
இவை அல்ல சம்பிரதம். இகலில் தெள்ளாற்று
அட்டு, அன்றே பொன்றும் வகை முனிந்த நந்தி,
அவனி நாராயணன், பார் ஆளும் கோமான்,
குட்டு அன்றே; மழை நீரைக் குடங்கை கொண்டு,
குரை கடலைக் குடிக்கின்றேன், குடக்கு நின்றே! 64

### தலைவி நிலவைப் பழித்தல்

குடக்குடை வேந்தன், தென் நாடுடை மன்னன், குணக்கினொடு
வடக்குடையான், நந்தி, மானோதயன், இந்த வையம் எல்லாம்
படக் குடை ஏந்திய பல்லவன் தன்னொடும், பார் அறியத்
துடக்கு உடையாரை அல்லால், சுடுமோ, இச் சுடர்ப் பிறையே! 65

### தோழி கூற்று

பிறை தவழ் செஞ் சடைப் பிறங்கல் நாரணன்
அறை கழல் முடித்தவன், அவனிநாரணன்,
நறை கெழு தொண்டையோன், தொண்டை கண்டபின்,
இறை கெழு சங்கு, உயிர், இவளுக்கு ஈந்ததே! 66

ஈகின்றது, புனமும் தினை; யாமும் பதி புகு நாள்
ஆகின்றது, பருவம்; இனி, ஆகும் வகை அறியேன்—
வாழ்கின்றது ஓர் புகழ் நந்திதன் வட வேங்கட மலைவாய்த்
தேய்கின்றது ஓர் உருவத்தொடு திரிவாரது திறமே! 67

### நந்தியின் வென்றிச் சிறப்பு

திறை இடுமின்; அன்றி, மதில் விடுமின்; நுங்கள்
செரு ஒழிய, வெங் கண் முரசம்
அறை விடுமின்; இந்த அவனிதனில் எங்கும்
அவனுடைய தொண்டை அரசு
நிறைவிடுமின்; நந்தி கழல் புகுமின், நுங்கள்
நெடு முடிகள் வந்து; நிகளத்து
உறைவிடுமின்; அன்றி, உறை பதி அகன்று
தொழுமின்; அலது உய்தல் அரிதே! 68

### தலைவன் கூற்று

அரி பயில் நெடு நாட்டத்து அஞ்சனம் முழுது ஊட்டி,
புரி குழல் மட மானைப் போதரவிட்டாரால்!—
நரபதி எனும் நந்தி நன் மயிலாபுரியில்
உருவுடை இவள் தாயர்க்கு உலகொடு பகை உண்டோ? 69

### மதங்கியார்

பகை இன்றிப் பார் புரக்கும் பல்லவர் கோன் செங்கோலின்
நகையும் வாண்மையும் பாடி, நன்று ஆடும் மதங்கிக்குத்
தகையும் நுண் இடை அதிர, தன பாரம் அவற்றோடு
மிகை ஒடுங்காமுன், இக் கூத்தினை விலக்க வேண்டாவோ? 70

செவிலி கூற்று

வேண்டார் எண்ணும் வேந்தர் பிராற்கே மெய் அன்பு
பூண்டாள்—நங்காய்!—அன்று இவள் என்றால், பொல்லாதோ?
மூண்டார் தெள்ளாற்று உள்ளே மூழ்க முனிவு ஆறி,
மீண்டான் நந்திக்கு என் மகள் தோற்கும், வெண் சங்கே. 71

தலைவி இரங்கல்

வெண் சங்கு உறங்கும் வியன் மாதர் முற்றத்து, விடியவே வான்
வண் சங்கு ஒலிப்ப, மடவார்கள் விளையாடும் மல்லை வேந்தன்,
தண் செங்கோல் நந்தி, தனிக் குடைக்கீழ் வாழாரின்
கண் சிம்புளியா நோய் யாமோ கடவோமே! 72

கடல் கூதிர் மொய்த்த கழிப் பெண்ணை நாரை
மடல் கூறுதோறும் மலி மல்லை, கங்குல்
அடற்கு ஊடு சாவே அமையாது, அவர் வை-
திடற்கு ஊறுவேனுக்கு ஏது ஆவி? உண்டோ! 73

தோழி கூற்று

உண் திரையின் செங்கழுநீர் இலஞ்சி மாடே,
ஒண் பொழிலில் சண்பகத்தார் தடவி ஓடி,
தண்டலையில் பூங் கமுகம் பாளை தாவி,
தமிழ்த் தென்றல் புகுந்து உலவும் தண் சோணாடா!
விண் தொடு திண் கிரி அளவும் வீரம் செல்லும்
விடேல்விடுகு! நீ கடவும் வீதிதோறும்
திண் தெறு கண் மாத் தொழுத பாவைமார்க்குச்
செங்கோலன் அல்லையோ, நீ செப்பட்டே? 74

பட்ட வேந்தர்தம் பூணோடும் பாவைமார் நாண், நெடுந் தெள்ளாற்றில்
வட்ட வெஞ் சிலை நாண் இடக் கழித்தவன் மல்லையின் மயில் அன்னாள்
விட்ட கூந்தலும், விழியும், நன் முறுவலும், நுதல் மிசை இடு கோலம்
இட்ட பொட்டினோடு இள முலைப் போகமும், எழுதவும் ஆகாதே! 75

ஆகாது போகம்; அயில் விளைத்து அகன்று அலவன் கை
போகாத சங்கம் அருளாளர் என்ற போது வண்டோ
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 76

### மறம்

அம்பு ஒன்று; வில் ஒடிதல்; நாண் அறுதல்;
நான் கிழவன் அசைந்தேன் என்றே,
வம்பு ஒன்று குழலாளை மணம் பேசி
வர விடுத்தார், மன்னர்?—தூதா!—
செம்பொன் செய் மணி மாடத் தெள்ளாற்றில்
நந்தி பதம் சேரார் ஆனைக்
கொம்பு அன்றே, நம் குடிலில் குறுங் காலும்
நெடு வளையும்; குனிந்து பாரே! 77

### செவிலி இரங்கல்

பாவையர் பரிந்து தாங்கும் பனி மலர் செறிந்த செந்தில்
கோவை ஏய் நந்தி காக்கும் குளிர் பொழில் கச்சி அன்னாள்,
பூவையும் பந்தும் தந்து புல்லினாள், என்னை; என்னே,
மா இயல் கானம் போந்தது அறிகிலேன், மதி இலேனே! 78

### தோழி கூற்று

நீண்டதாம் கங்குல்; எங்கும் நிறைந்ததாம் வாடை பொங்கி
மூண்டதாம், மதியினோடே; முயங்கு தார் வழங்கு—தெள்ளாற்று
ஈண்டினார் பரியும் தேரும் இரு கை வென்று, ஒரு கை வேழம்
தூண்டினான், நந்தி! இந்தத் தொண்டை நாடு உடைய கோவே! 79

### நற்றாய் இரங்கல்

கோலக் கொடி அன்னவர் நீள் செறுவில்
குறு தேன் வழி கொண்டு அலரும் குவளை
காலைப் பொழுதின் எழு கன்னியர் தம்
கண்ணின்படி காட்டிடு கச்சியின்வாய்,
மால், அத் தெள்ளாறு எறிந்த மானோதயன், குடைக்கீழ்
ஞாலத்தோடு ஒத்ததே, நான் பெற்ற நறுங் கொம்பே? 80

### தோழி கூற்று

கொம்பு உயர் பைம் பொன் நாகம் எதிர் வந்த
நந்தி, குல வீரர் ஆகம் அழியத்
தம்பியர் எண்ணம் எல்லாம் பழுதாக
வென்ற தலை மான வீர துவசன்,
செம்பியர் தென்னர் சேரர் எதிர் வந்து
மாய செரு வென்ற பாரி, முடிமேல்
வம்பு உயர் தொண்டை காணும் மட மாதர்-
தம் கை வளை கொண்டது என்ன வலமே? 81

பூவை நிலை

வலம் வரு திகிரியும், இடம் வரு பணிலமும், மழை தவழ் கொடி போலக்
குலமயிற் பாவையும், எறி கடல் வடிவமும், இவை இவை கொண்டாயே.

தோழி கூற்று

கொண்டல் உறும் பொழில் வண்டுஇனம், மா மணி
வண்டல் இடும் கடல் மல்லை காவலனே!
பண்டை மராமரம் எய்த பல்லவனே!
தொண்டை ஒற்றுவள், இவள் தோள் வளையே. 83

தலைவி கூற்று

தோளால் மெலியாமே, ஆழ் கடலால் சோராமே,
வாளா பெறலாமே—வாய் அற்றீர்!—கேளாதார்
குஞ்சரங்கள் சாயக் குருக்கோட்டை அத்தனையும்
அம் சரங்கள் ஆர்த்தான் அருள்? 84

தோழி கூற்று

'அருளானது எங்கையர்க்கே; அன்னாய்!' என்று
இயம்பிடும் எம் கன்னி செஞ்சொல்
தெருளா, மேல் நல்கு—நந்தி! தெள்ளாற்றில்
பொருத போர்தன்னில் அந் நாள்,
இருளான மத கரியும் பாய்மாவும்
இரதமும் கொண்டு எதிர்ந்தார் தம்முன்,
மருளாமே, நன் கடம்பூர் வான் ஏற,
வளைந்து வென்ற மன்னர் ஏறே! 85

'ஏறு பாய விளைவித்தது எல்லாம்; வார்க் குங்குமக் கொங்கை
வீறு பாயக் கொடுக்கின்ற விடலை யார் கோ?' என்கின்றீர்;
மாறு பாயப் படை மன்னர் மாவும் தேரும் தெள்ளாற்றில்
ஆறு பாயச் சிவந்த தோள் இணை காவிரி நாடு ஆள்வானே! 86

ஆயர் வாய்க் குழற்கு ஆற்றுறுகின்றிலள்;
ஏயும் மாங் குயிற்கு என்னைகொல் ஆவதே—
தேயம் ஆர் புகழ்த் தேசபண்டாரி தன்
பாயல்மேல் வரல் பார்த்து நின்றாளுக்கே! 87

## 21

### தலைவி புள்ளொடு இரங்குதல்

துளவு கண்டாய், பெறுகின்றலம்;
சென்று இனிச் சொல்ல வல்ல
அளவு கண்டாய்; வந்த தாதி கண்டாய்;
அடல் வேழம் உண்ட
விளவு கண்டாலன்ன மேனி கண்டாய்;
விறல் மாரன் செய்த
களவு கண்டாய்;—நந்தி மல்லை அம்
கானல் கழிக் கம்புளே! 88

# தனிப் பாடல்கள்

'என்னை யானே புகழ்ந்தேன்' என்றோதே!—எப் புவிக்கும்
மன்னர் கோன், நந்தி, வரதுங்கன், பொன் முடியின்
மேல் வருடும் தொண்டை விரை நாறும் இன்னமும், என்
கால் வருடும் சேடியர்தம் கை. 1

கைக் குடம் இரண்டும், கனககும்பக் குடமும்,
முக் குடமும் கொண்டால் முறியாதே—மிக்க புகழ்
வேய்க் காற்றினல் விளங்கும் வீர நந்தி மா கிரியில்
ஈக் காற்றுக்கு ஆற்ற இடை? 2

'இந்தப் புவியில் இரவலர் உண்டு' என்பது எல்லாம்
அந்தக் குமுதமே அல்லவோ?—நந்தி
தடங் கைப் பூபாலன்மேல் தண் கோவை பாடி,
அடங்கப் பூ பாலர் ஆனர்! 3

அடி விளக்கும்; துகில் ஆடை விளக்கும்; அரசர் பந்தப்
பிடி விளக்கும்; எங்கள் ஊரார் விளக்கும்; பெரும் புகழால்
படி விளக்கும் நந்தி எம் கோன் பெரும் படை வீட்டுக்கு எல்லாம்
விடி விளக்கும், இதுவே; நாங்கள் பூண்பதும் வெண் முத்தமே. 4

ஏம வரை சலிக்கும், ஏழ் ஆழியும் கலங்கும்;
காம வயிரி களம் கறுக்கும்; சோமன்
வரும்;—நம் தியானத்து மானரை விட்டுப்
பொரு நந்தி போந்த பொழுது. 5

ஊரும், அரவமும், தாமரைக் காடும், உர வரம்பும்,
தேரும் உடைத்து என்பர், சீருத நாள்; நந்தி சீறிய பின்பு,
ஊரும் அரவமும், தா மரைக் காடும், உரவர் அம்பும்,
தேரும் உடைத்து என்பரே—தெவ்வர் வாழும் செழும் பதியே. 6

திருத்து ஏர் புகழ் நந்தி, தேசபண்டாரி, தெள்ளாறை வெற்பில்
மருத் தேர் குழலிக்குக் கார் முந்தும்ஆகில், 'மகுட ரத்னப்
பரித் தேரும் பாகும் அங்கு என் பட்டவோ!' என்று, பங்கயக் கை
நெரித்தே, வயிற்றில் வைத்தே நிற்பளே—வஞ்சி நெஞ்சு உலர்ந்தே! 7

சிவனை முழுதும் மறவாத சிந்தையான்,
செயம் முன் உறவு தவிராத நந்தி ஊர்க்
குவளை மலரின் மது ஆரும் வண்டுகாள்!
குமிழி சுழியில் விளையாடு தும்பியே!
அவனி மழை பெய் குளிர் காலம் வந்ததே!
அவரும் அவதி சொன நாளும் வந்ததே!
கவலை பெரிது! பழிகாரர் வந்திலார்!
கணவர் உறவு கதையாய் முடிந்ததே! 8

தொடர்ந்து பலர் இரந்த தொண்டை அம் தார் நாங்கள்
நடந்த வழிகள்தொறும் நாறும்—படர்ந்த
மலை கடாம் பட்டனைய மால் யானை நந்தி
முலைகள்தாம் பட்டு அசையாமுன். 9

நம் ஆவி நம் கொழுநர் பாலதா, நம் கொழுநர்-
தம் ஆவி தம் பாலது ஆகும் தகைமையினால்,
செம் மாலை,—நந்தி சிறுகுடி நாட்டு அன்னமே!—
தம் ஆவி தாம் உடையர் அல்லரே, சாகாமே! 10

மங்கையர் கண் புனல் பொழிய, மழை பொழியும் காலம்;
மாரவேள் சிலை குனிக்க, மயில் குனிக்கும் காலம்;
கொங்கைகளும் கொன்றைகளும் பொன் சொரியும் காலம்;
கோகனகம் நகை முல்லை முகை நகைக்கும் காலம்;
செங் கை முகில் அனைய கொடைச் செம் பொன் பெய் மேகத்
தியாக பரன் நந்தி அருள் சேராதார் போல,
அங்கு உயிரும் இங்கு உடலும் ஆன மழைக் காலம்;
அவர் ஒருவர் நாம் ஒருவர் ஆன கொடுங் காலம்! 11

அன்னையரும் தோழியரும் அடர்ந்து பொரும் காலம்;
ஆனி போய் ஆடி வரை ஆவணியின் காலம்;
புன்னைகளும் பிச்சிகளும் தங்களின் மகிழ்ந்து,
பொற் பவள வாய் திறந்து பூச் சொரியும் காலம்;
செந்நெல் வயல் குருகு இனம் சூழ் கச்சி வள நாடன்,
தியாகி எனும் நந்தி தடந் தோள் சேராக் காலம்;
என்னை அவர் அற மறந்து போனாரே தோழி!
இளந்தலை கண்டே நிலவு பிளந்து எரியும் காலம்! 12

ஈட்டு புகழ் நந்தி பாண! நீ எங்கையர்தம்
வீட்டு இருந்து பாட, 'விடிவு அளவும், காட்டில் அழும்
பேய்' என்றாள், அன்னை; பிறர், 'நரி' என்றார்; தோழி,
'நாய்' என்றாள்; நீ என்றேன் நான். 13

கோட்டை இடித்து அகழ் குன்று ஆக்கி, குன்று அகழ் ஆக்கி, தெவ்வர்
நாட்டை மிதிக்கும் கடாக் களிற்றான், நந்தி நாட்டினில், பொன்
தோட்டை மிதித்து, அந்தத் தோட்டுடு பாய்ந்து சுருள் அளகக்
காட்டை மிதிக்கும் கயல் கண்ணியோ, சுரம் கால் வைப்பதே! 14

செந் தழலின் சாற்றைப் பிழிந்து, செழுஞ் சீதச்
சந்தனம் என்று ஆரோ தடவினார்—பைந் தமிழை
ஆய்கின்ற கோன் நந்தி ஆகம் தழுவாமல்
வேகின்ற பாவியேன்மேல்? 15

சதிராக நந்தி பரன்தனைக் கூடிய தையலரை
எதிர் ஆக்கி, என்னை இளந்தலை ஆக்கி, என் அங்கம் எல்லாம்
அதிர் ஆக்கி, தூசும் அழுக்கு ஆக்கி, அங்கம் அங்காடிக்கு இட்ட
பதர் ஆக்கி, என்னையும் பற்றாமல் ஆக்கிய பாலகனே! 16

ஓடும் முகில்இனங்காள்! ஓடாத தேர் சுமந்த
கூடு வருகுது என்று கூறுங்கோள்—நாடியே
நந்திச் சீராமனுடை நல் நாட்டில் நாயகியைச்
சந்திச்சீர்ஆமாகில் தான். 17

மண் எலாம் உய்ய மழைபோல் வழங்கு கரத்
தண் உலா மாலைத் தமிழ் நந்தி நல் நாட்டில்,
பெண் இலா ஊரில் பிறந்தாரைப் போல வரும்
வெண்ணிலாவே! இந்த வேகம் உனக்கு ஆகாதே. 18

காவி அனந்தம் எடுத்தான்—மதன்—கைக் கரும்பு எடுத்தான்;
மேவிய நந்தவனம் புகுந்தான், இனி வேட்டம் செய்வான்;
ஆவி அனந்தம் உண்டோ? உயிர்தான் விட்டு அகலும் முன்னே,
தேவு இயல் நந்திக்கு இங்கு ஆர் ஓடி விண்ணப்பம் செய்குவரே! 19

செய்ய கமலத் திருவுக்கு முன் பிறந்த
தையல் உறவு தவிர்ந்தோமே—வையம்
மணக்கும் பெரும் புகழான் மானபரன் நந்தி
இணக்கம் பிறந்த நாள் இன்று! 20

வான் உறு மதியை அடைந்தது உன் வதனம்;
மறி கடல் புகுந்தது உன் கீர்த்தி;
கான் உறு புலியை அடைந்தது உன் வீரம்;
கற்பகம் அடைந்த உன் கரங்கள்;
தேன் உறு மலராள் அரி இடம் புகுந்தாள்;
செந் தழல் அடைந்தது, உன் மேனி;
யானும் என் கவியும் எவ் விடம் புகுவேம்?
எந்தையே! நந்தி நாயகனே! 21

வான் உறை மதியில் புக்கது உன் தட்பம்;
மறி கடல் புக்கது உன் பெருமை;
கான் உறை புலியில் புக்கது உன் சீற்றம்;
கற்பகம் புக்கது உன் கொடைகள்;
தேன் உறை மலராள் அரியிடம் புகுந்தாள்;
செந் தழல் புக்கது உன் மேனி;
யானும் என் கவியும் எவ்விடம் புகுவோம்?
நந்தியே! எந்தை பிரானே! 22

வார் ஊரும் மென் முலை; வார்த்தை கண்டு ஊரும்; மதி முகத்தில்
வேர் ஊரும்; மேனி வியன் தளிர் ஊரும்; விசயனுக்குத்
தேர் ஊரும் மால் நந்தி, தேசபண்டாரி, தெள்ளாறை வெற்பில்,
கார் ஊர் குழலிக்குக் காது அளவு ஊரும், கடைக் கண்களே! 23

பொருப்பு அரையன் மடப் பாவை புணர் முலையின் முகடு தைத்த
நெருப்பு உருவம் வெளி ஆக, நீறு அணிந்த வரை மார்ப!—
பருப் புரசை மத யானைப் பல்லவர்கோன் நந்திக்குத்
திருப் பெருக அருளுக—நின் செழு மலர்ச் சேவடி தொழுவே! 24

கண் என்பதும் இலையே; மொழிவாய் என்பதும் இலையே;
காது என்பதும் இலையே; இது காலம்தனில் அடைவோ?
நண்ணும் பனையோலைச் சுருள் அரசன் திருமுகமோ?
நண்ணு வரு தூதா! உனை விண் ஆளிட விடவோ?
மண்ணும் புனல் எட்டுத் திசை ஏகம்பல வாணன்
மாபத்திறலோன் நந்தியை மறவோர்களிடத்தே,
'பெண்' என்பவன் வாயைக் கிழி; தூதன் செவி அறடா!
பெண்ணும் கிடையாது; இங்கு ஒரு மண்ணும் கிடையாதே! 25

## 27

பருவ முகில் எழுந்து மழை பொழியும் காலம்;
பண்டு உறவு ஆக்கிய தெய்வம் பகை ஆக்கும் காலம்;
'வருவிர்! வருவீர்!' என்று வழி பார்க்கும் காலம்;
வல் வினையேன் தனி இருந்து வாடும் காலம்;
ஒருவர் நமக்கு உண்மை சொல்லி உரையாக் காலம்;
ஊர் உறங்க, நம் இரு கண் உறங்காக் காலம்;
இருவரையும் இந் நிலம் விட்டு அழிக்கும் காலம்;
இராச மன்னர் நந்தி தோள் சேராக் காலம். 26

இரும்பு உழுத புண்ணிற்கு இடு மருந்தோ, என்றோ,
அருந் துயரம் தீர்க்கும்?—அனையே!—பெரும் புலவர்
தன் கலியைத் தீர்க்கும் தமிழாகர நந்தி;
என் கலியைத் தீர்ப்பான் இவன். 27

# பாடல் முதற்குறிப்பு அகராதி


அடல் ஏறு வலத்து 55
அடி விளக்கும் த.4
அதிர் குரல மணி 14
அம்பு ஒன்று 77
அரி பயில் நெடு 69
அருளானது 85
அளவு கண்டால் 48
அறம் பெருகும் 60
அன்னையரும் தோழியரும் த.12

ஆகாது போகம் 76
ஆகிடுக மாமை 51
ஆயர் வாய்க் 87
ஆர்க்கின்ற கடல் 35
ஆள் குலாம் கடற்படை 18
ஆரு விறல் அடு போர் 40

இந்தப் புவியில் த.3
இரும்பு உழுத த.27

ஈகின்றது புனமும் 67
ஈட்டு புகழ் நந்தி த.13

உண் திரையின் 74
உரை வரம்பு இகந்த 23
உளமே கொடி மருங்கு 52

ஊசல் மறந்தாலும் 30
ஊரும் அரவமும் த.6

என்னே யானே த.1
எனதே கலே 2

ஏம வரை த.5
ஏழைமார் துணே 21
ஏறு பாய விளேவித்தது 86

ஒரு கோமகன் நந்தி 44

ஓடு அரிக்கண் 29
ஓடும் முகில்இனங்காள் த.17
ஓம மறைவாணர் 15
ஓராதே என் மகளேச் 62

கடல் கூதிர் 73
கடுவாய் இரட்ட 6
கண் என்பதும் த.25
கலம் கொள் அலங்கல் 32
கவரிச் செந்நெல் 28

கால விணேவாணர் 57
காவி அனந்தம் த.19

குடக்குடை வேந்தன் 65
குருகு உதிர் 4
குலமரபும் 49

கைக் குடம் இரண்டும் த.2

கொண்டல் உறும் பொழில் 83
கொம்பு உயர் பைம் 81

கோட்டை இடித்து த.14
கோதை சோரின் 10
கோலக் கொடி 80
கோவேம் மாலே 50

சதிராக நந்தி த.16

சிவனே முழுதும் த.8

சூழி வன் மத யானேயின் 37

செங்கோல் வளேக் கை 42
செந்தழலின் சாற்றைப் த.15
செய்ய கமலத் த.20
செய்ய வாய் 47
சென்று இஞ்சிமேல் 16

ஞான்ற வெள் அருவி 36

தனக்கு உரிய என் 53

தார் வட்டக் கிளி 54

| | |
|---|---|
| திருத்து ஏர் புகழ் | த.7 |
| திருவின் செம்மையும் | 61 |
| திறை இடுமின் | 68 |
| துயக்குவித்தான் | 63 |
| துளவு கண்டாய் | 88 |
| தொடர்ந்து பலர் | த.9 |
| தொண்டை வேந்தன் | 5 |
| தோளான் | 84 |
| நங்கள் கோத் | 39 |
| நம் ஆவி நம் | த.10 |
| நல்கும் நந்தி | 59 |
| நன்றும் நெடிதாய் | 20 |
| நாணுது இத் திரு | 41 |
| நிற்க மன்னவர் | 22 |
| நீண்டதாம் கங்குல் | 79 |
| நூற்கடற் புலவன் | 26 |
| நெஞ்சு ஆகுலமுற்று | 11 |
| பகரம் கொள் | 38 |
| பகை இன்றிப் பார் | 70 |
| பட்ட வேந்தரும் | 75 |
| பதிதொறும் புயல் | 17 |
| பருவ முகில் எழுந்து | த.26 |
| பாடிய நாவலரோ | 31 |
| பாவையர் பரிந்து | 78 |
| பிறை தவழ் செஞ் சடைப் | 66 |
| புயங்களின் பூவைமார் | 8 |
| புரவலன் நந்தி | 58 |
| புனத்து நின்ற | 34 |
| பொருப்பு அரையன் | த.24 |
| பொழுது கண்டு | 3 |
| மங்கையர் கண் புனல் | த.11 |
| மண் எலாம் உய்ய | த.18 |
| மண்டலம் ஆய் | 1 |
| மதியம் எரி சொரியும் | 45 |
| மயில் கண்டால் | 25 |
| மலர்க்குல மாதவிதன்மேல் | 56 |
| மற மத கரி திசை | 7 |
| மன்னன் மட மயிலே | 24 |
| மாட்டாதே இத்தனை நாள் | 46 |
| மொழி ஆர் தொண்டைப் | 43 |
| வட்டு அன்றே | 64 |
| வலம் வரு | 82 |
| வளை வார் குழல் | 13 |
| வாடை நோக வீசுமால் | 9 |
| வார் ஊரும் மென் | த.23 |
| வான் உறு மதியை | த.21 |
| வான் உறை மதியில் | த.22 |
| விடுதிர் கொல்லோ | 12 |
| விரவாத மன்னர் | 19 |
| வினையின் சிலம்பன் | 33 |
| வீர தீரன் | 27 |
| வெண் சங்கு உறங்கும் | 72 |
| வேண்டார் எண்ணும் | 71 |

Printed by S. Viswanathan at the Central Art Press,
'Acton Lodge', 11 McNichol Road, Chetput, Madras 31.